# அக்கினிப் பூக்கள்

ஈழவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கினிப் பூக்கள்

## ஈழவாணன்

கலசம் பப்ளிக்கேஷன்ஸ்
KALASAM PUBLICATIONS
30, SEA AVENUE, COLOMBO-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலசம் பப்ளிக்கேஷன்ஸ்
வெளியீடு—1.
முதற் பதிப்பு: டிச. 1973
உரிமை பதிவு.
விலை: ரூபா. 3-00

# AKKINI POOKKAL

(A COLLECTION OF TAMIL POEMS)

*Author:*

POET **EELAVANAN**
(M. DHARMARAJAH)

*Publishers:*

**KALASAM PUBLICATIONS**
30, Sea Avenue, COLOMBO-3.

*First Edition:*

**DECEMBER, 1973.**

PRICE **3/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிமலர்

ஆன்றகலை யாக்கங்கள்
அனைத்தும் வல்லோன்,
ஆற்றலினைக் கண்டனைத்து
ஆர்வ மூட்டி
ஈண்டுபெரு இலக்கியங்கள்,
எழுத்தாளர் தம்
இறவாத நற்புகழுக்
குரிய ஆசான்!
சீண்டுபவர் அற்றிருந்த
சிறியேன் என்னைச்
செந்தமிழில் கவிபடைத்து
சிறக்க வைத்த
சான்றோரும் எஸ். டி. சிவ
நாயகம் என்றழைக்கும்
தமிழறிஞர்க் கிக்கவிதை
மலர் படைத்தேன்.

—ஈழவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நம் நாட்டில் ஓர் அர்த்தப் புஷ்டியான இலக்கிய விழிப்பு ஏற்பட்டு வருவதை அவதானிக்கலாம். அவ் விழிப்பின் காரணமாக, தேசிய இலக்கியப் படைப்புகள் இன்று பல்கிப் பெருகி வருகின்றன. இந்த ஆக்கப் பூர்வமான பணியில் படைப்பிலக்கிய வாதிகளுடன் "கலசம் வெளியீடுகளும்" இன்று சங்கமமாகின்றன!

நமது நாட்டு இலக்கியத் துறை வளர்ச்சியை ஊக்கு விக்கக் கூடிய விதத்தில் "கலசம்" மாதம் ஒரு இலக்கியப் படைப்பை வெளியிடத்திட்டமிட்டுள்ளது. எமது முதல் வெளியீடாக "அக்கினிப்பூக்கள்" கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளோம்—

தமிழ் இலக்கியத்தில் தனிப் பாடல்கள் தனித்துவமானவை! சங்க காலத்தொடரில் இருந்தே இச்சிறப்பியல்பு இழையோடி வந்திருக்கின்றது! இன்றைய நவீன இலக்கியப் போக்கிலே கவிதைத் துறையின் முக்கிய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு உள்ளவை தனிப் பாடல்களாகும். இத்துறையில் கவிஞர் ஈழவாணன் அவர்களின் கவிதைகள் தனித்துவமானவை!

கவிஞர் ஈழவாணனின் இலக்கியப் பார்வைகள் பரந்து—விரிந்து—செறிந்தனவாகும்! இவர் பல் வேறு இலக்கியத் துறைகளிலும் ஈடுபாடு உள்ளவர். கதை—கட்டுரை—கவிதை—நாவல்—இலக்கிய விமர்சனம் ஆகிய சகல துறைகளிலும் பல புனைப் பெயர்களில் எழுதிப் பிரபல்யமானவர்.

இத்தகையச் சிறப்புடைய ஒரு கவிஞரின் படைப்பைச் கலசத்தின் முதல் வெளியீடாக வெளியிடுவதில் நாம் பெருமை அடைகின்றோம்.இந்த நூல் ஆசிரியருக்கும், அணிந்துரை அளித்துள்ள விமர்சகரும் கவிஞருமான திரு. முருகையன் அவர்களுக்கும், மற்றும் கவிஞர் பாலபாரதி, ஓவியர் "ஹரனு", கொழும்பு, ரஞ்சனு அச்சகத்தாருக்கும் நமது நன்றி!

தமிழ் கூறுநல்லுலகம் எமது முயற்சியை ஆதரித்து ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

**கனக. பாலசுப்பிரமணியம்**
(பதிப்பாசிரியர்)

கொழும்பு
25—12—73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞர்**
**இ. முருகையன்**
**அவர்களின்**

---

# அணிந்துரை

முன்னொரு காலத்திலே, ஈழத்துப் பத்திரிகைகள் வாரந்தவறாமல், வளமான கவிதைகளை வெளியிட்டு வந்தன. முன்னணிக் கவிஞர்கள் பலர் சோர்வோ, சோம்பலோ இல்லாது தொடர்ச்சியாக எழுதி வந்தார்கள். வாசகர்களும் அவற்றைப் படித்துப் பயின்ற காரணத்தாற் போலும் — நிரம்பிய ரசனைப்பண்பு வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தார்கள். அதனால், இடையீடில்லாத ஒரு கவிதைப் 'பெருந்தெரு' இந்த நாட்டில் இருந்தது. குச்சொழுங்கைகளும், முடக்குகளும் ஒரு சில இருந்தனவே யாயினும், மேற்கூறிய பெருந்தெரு பலரும் அறிந்த பிரசித்த வீதியாகத் திகழ்ந்தது என்றே கூறுதல் வேண்டும்.

கவிதை உலகில் நிலவிய இந்த நல்ல நிலைமை "முன்னொரு காலத்தில்" இருந்தது என்று நாம் கூறுவது ஏன் என்று சிலர் எண்ணலாம். 'காகமும் நரியும்', 'நரியும் திராட்சையும்' போலவுள்ள 'காலங்கடந்த' கதைகளைக் கூறும்போது தானே "முன்னொரு காலத்திலே" என்று தொடங்குவது வழக்கம்! அப்படிப்பட்ட ஒரு நிச்சயமில்லாத பழங்காலத்து வரலாற்றைப்பற்றி அன்று, தாம் இங்கு குறிப்பிடுவது. ஏறத்தாழப் பதினைந்தாண்டுகளுக்கு முந்திய ஒரு நிலைமையைத்தான் நாம் இங்கு நினைத்துப் பார்க்கிறோம். அந்த நாளிலே, வீரகேசரி, தினகரன், சுதந்திரன், ஈழகேசரி என்ற பத்திரிகைகளே கவிதைகளைத் தாபரிந்து பிரசுரித்து வந்தவை. அப்போது இப்பத்திரிகைகளுக்குப் 'பின்னால்' இருந்த சில்லையூர் செல்வராசனும், க. கைலாசபதியும், எஸ். டி. சிவநாயகமும், இராஜஅரியரத்தினமும் அக்காலத்தெழுந்த கவிதைகளைப் பாகுபடுத்தி மதிப்பிடும் ஆற்றல் பொருந்தியவர்களாக இருந்தனர். ஆகையால் அவர்கள் ஈழத்துக் கவிதைக் கலையின் எழுச்சிக்குச் சிறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக உதவ வல்லவர்களாக இருந்தனர். அவர்களின் மேற்பார்வையில் இருந்த பத்திரிகைகளும் தமது சிறப்பான பங்களிப்பைச் செய்தன.

ஆனால் இன்று நிலைமை அப்படியாக இல்லை. பெருந்தொகையில் விற்பனையாகும் பத்திரிகைகள் தங்கள் கவிதைப் பிரசுரிப்பை வெகுவாகக் குறைத்து விட்டன. அப்படியன்றி, கலை—இலக்கிய இலட்சியம் கருதி வெளிவரும் ஓரிரு சஞ்சிகைகளே இன்று கவிதைக் கலைக்குத் தஞ்சம் அளிக்கின்றன. இன்று, கவிதைகளின் தன்மைகளும், தகைமைகளும் பன்முகப்பட்டு விட்டமையால் எவற்றைப் பிரசுரிக்கலாம், எவற்றை நிராகரிக்கலாம் என்று முடிவு செய்வது கூட, மேற்படி சஞ்சிகை ஆசிரியர்களுக்குப் பெரும் பிரச்சனையாக உள்ளது. இந்த நிலைமையில், இன்றைய ஈழத்துக் கவிதைக்கலை, பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் நம்பி வாழும் ஒன்றாக இல்லை.

அப்படியானால், கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்குமுள்ள பிரதான வெளியீட்டுச் சாதனங்கள் எவை? இரண்டு வகையான சாதனங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஒன்று, அவ்வப்போது நடைபெறும் கலைவிழாக்களிலும், இலக்கிய விழாக்களிலும் இடம் பெறும் கவியரங்குகள். மற்றது, வெகு சிரமத்துடன் எழுத்தாளர்கள் தாமே வெளியிடும் புத்தகங்கள், கவியரங்கம், புத்தக வெளியீடு என்பன தவிர,வானொலியும் சிலவேளைகளில்,கவிதைகளைச் சுவைஞர்களுக்கு எடுத்து வழங்கும் சாதனமாகத் திகழ்கிறது. ஆயினும் புத்தக வெளியீடே இன்றைய ஈழத்து எழுத்தாளனின் பிரதான சாதனம் என்று கூறுவது பிழையாகாது.

இவ்வாறு நாம் கூறுவதால், புத்தகமொன்றை அச்சிட்டு வெளிப்படுத்துவது இலகுவான சாதனை என்றோ, புத்தகங்கள் எல்லாம அமோகமாக விற்பனையாகின்றன என்றோ எவரும் கருதி விடலாகாது. ஏறி வரும் வாழ்க்கைச் செலவுகளோடு கூட, விண்ணளாவி எழும் அச்சீட்டுச் சலார்களும், காகிதத் தட்டுப்பாடும் இன்று புத்தக வெளியீட்டை மேலும் மேலும் கடினமாக்கி வருகின்றன. அதனோடு புத்தக விற்பனையை மொத்தமாகப் பொறுப்பேற்று அக்கறையுடன் வெற்றிகரமாகச் செய்யக்கூடிய விநியோகத்தர்களும், விற்பனையாளர்களும் கூடியதொரு, திறமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பொழுங்கு எங்களிடம் இல்லாமை பெருங்குறையாகும்.

இத்தனை சிக்கல்களுக்கும், பிரச்சினைகளுக்கும். இடைஞ்சல்களுக்குமிடையிலேதான் 'ஈழவாணன்' எழுதிய **'அக்கினிப் பூக்கள்'** என்ற கவிதைத் தொகுதி வெளிவருகிறது. இந்தத் தொகுதியிலே கவிஞர் அவ்வப்போது எழுதிய பல கவிதைகள் இடம் பெறுகின்றன. இவற்றைப் படித்துப் பார்க்கும்போது, எமது கவிதைக்கலை வரலாற்றின் பலபடி நிலை வளர்ச்சிகளும் எம்மனக்கண் முன் வருகின்றன. சொல்வள வீச்சும், கற்பனை மினுக்கமும் கொண்ட சுவைப்பிழிவுகள் தொடக்கம், ஆன்றவிந் தடக்கிய கொள்கையும், சான்றாண்மையும், சிந்தனைத் தெளிவும் கொண்ட சொற்கலை நுணுக்கப் படையல்கள்வரை பல்வேறு வகைப் பட்ட பாட்டுசனையும் நாம் நினைத்துப் பார்க்கிறோம். இவை மட்டுமல்லாமல் வெகு அண்மைக்காலத்திலே எங்கள் புதிய தலைமுறை எழுத்தாளர்களின் கவிதைகளிலே காணப்படும் சொல் வறுமையையும் நாங்கள் எம்மை அறியாமலே எண்ணிப் பார்க்கிறோம்.

மலையகத்துப் பிரமுகரும் கவிஞருமான திரு. சி. வி. வேலுப்பிள்ளை அண்மையிலே ஒரு கூட்டத்திலே பேசிய பொழுது வேடிக்கையாகக் கேட்ட ஒரு வினா இந்த இடத்தில் எம் நினைவுக்கு வருகிறது. "எளிய நடை, எளிய நடை என்று கூறுகிறார்களே — அது என்ன? வறிய நடையா? **Poverty Stricken** நடையா?" என்று அவர் கேட்டார்.

வழக்கொழிந்த புராதனச் சொற்களை அகழ்ந்தெடுத்துக் கொண்டு வந்து தமிழ் வாசகர்களைப் பண்டிதர்கள் ஒரு காலத்திலே பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். சாதாரண வாசகன் கண்டு மிரளும் ஒரு பண்டமாக, தமிழ்க் கவிதை ஒரு காலத்தில் இருந்தது. அந்தக் காலத்தில் எழுந்த நியாயமான ஒரு கோரிக்கைதான் 'எளிய நடை வேண்டும்' என்ற கோட்பாடு. ஆனால், இன்றைய கலை இலக்கியப் படைப்புக்களையும், மொழி நிலையையும் எண்ணும் போது அந்தப் பழைய கோட்பாட்டை மறு பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்துக்கு நாம் வந்திருக்கிறோம்.

ஏனென்றால் இன்று கவிதை என்ற பெயர் பூண்டு உலாவரும் துணுக்குகளிற் பல, அர்த்தச் செழுமை குன்றிய வெற்றுச் சொற்களின் பாமரத்தனமான கோவைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. விமரிசகர்கள் சிலர் இந்த அப்பட்டமான உண்மையை வெளிப்படையாகச் சொல்வதற்குக் கூச்சப் படலாம்; அல்லது பின்னிற்கலாம். அந்தக் கூச்சத்துக்கும், பின்னிற்புக்கும் காரணங்களும் இருக்கலாம் — ஆனால் இதுதான் உண்மை.

சொல் வறுமை உள்ள கவிதைகளை எழுதி வெளியிடுவதே இன்றைய பொது வழக்கமாக இருக்கையில், ஈழவாணனின் பாடல்கள், அவ்வழக்கமான போக்குக்கு மாறுபட்டவையாக உள்ளன. இது மிகவும் ஆறுதல் தரும் ஒரு பண்பாக மிளிர்கிறது. எடுத்துக்காட்டாக,

**கண்பொத்தி விளையாட்டுக்**
**காட்டி இங்கே**
**கனவுலகில் வாழ்கின்ற**
**நிலையில் உள்ளோர்**
**பன்னீரில், சந்தனத்தில்**
**குளித்து, வாசப்**
**பனிமலரின் சுகங்கண்டு**
**படுத்துக், காதற்**
**பெண்ணின் இதழோரம்**
**சுவைத்து வாழ்வுப்**
**பேரின்ப நிலை காணும்**
**வர்க்கத் தோரின்**
**எண்ணங்கள் மண்ணாக**
**இந்த வையம்**
**எழுந்தோடிச் செல்கிறதோர்**
**உலகை நாடி.**

என்ற பாடலில் வரும் சொற்கள் கடினமானவை என எவரும் கருதார், ஆனால் இவை வறிய சொற்களும் அல்ல. எலும்பும், தோலுமாக மெலிந்த 'பஞ்சத்து ஆண்டிகளாக' இவை இல்லை. அர்த்தச் செழுமையும் பூரிப்பும் கொண்டவையாக, கட்டிளமை சொட்டுகிறவையாக இந்தச் சொற்கள் அமைந்து எமக்கு ஒருவகை நிறைவைத் தருகிறது. அரிசிக்கும், பாணுக்கும் தட்டழிந்து மாய்ந்து, மக்களெல்லாம் உலையும் இந்தப் பஞ்ச காலத்தில், நாம் வாசிக்கும் கவிதைகளில் இடம் பெறும் சொற்களாவது செழுமையாக இருந்தால் என்ன — குடியா முழுகிப்போய்விடும்? செழுமையான சொற்கள் கவிதையில் வரலாமே என்று நாம் அங்கலாய்க்கிறோம். ஆனால், வாழ்க்கையில் இல்லாத பொய்மைகளை, போலி மினுக்கம் கொண்ட வெற்றுச் சொற்கள் கொண்டு கவிஞர்கள் படைத்துக்காட்டுதல் வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் என்பதன்று நம் கருத்து. செழுமையான சொற்கள் என்று சொல்லும்போது, அர்த்தம் பொதிந்து, ஆற்றல் மிகுந்து நிகழும் சொற்களையே நாம் கருதுகிறோம். ஆசைக் கனவுகளையும், உண்டாட்டுக் களியாட்டையும், போதை மயக்குகளையும், எப்பங்களையும், கொட்டாவிகளையும் மாத்திரம் சித்தரிப்பவைதான் அர்த்தப்பொதிவுள்ள சொற்கள் என்று கருதுவது தவறு. இன்னல்களையும், ஏக்கங்களையும் தத்தளிப்புகளையும், போராட்டங்களையும், ஏமாற்றங்களையும், அநீதிகளையும் சித்தரிப்பவைகூட, தகுதியும் பொருத்தமும் உடைய, அர்த்தப்பொதிவுமிக்க சொற்களாக அமையலாம்.

நாற்றம் எடுத்திடும்
இதயத்தை மூடி
நறுமணச் சவ்வாதுக்
கவிதைகள் பாடி
        சேறும் சகதியும்
        கொண்ட நம் வாசல்
        சின்ன ஒழுங்கையால்
        செல்வோர்கள் உண்டு.
காற்றுாதி எரிக்கின்ற
அக்கினியாம் எம்
கண்கள் உகுத்திடும்
கண்ணீரைக் கண்டும்
        சேரியின் வாழ்விலே
        வானத்து வியர்வை
        சிலிர்த்திடும் தூறல்கள்
        பெய்யவும் இல்லை.

ஈழவாணனின் இந்த வரிகளில், வீறும், விறுவிறுப்பும் உள்ள சொற்களின் கையாட்சியை நாம் நிதரிசனமாகக் காண்கிறோம். சொல்லாட்சிச் சிறப்புக்குப் பின்னால் நிற்கும் எண்ணச் சீர்மையையும் நாம் இனங் கண்டு கொள்கிறோம்.

இவருடைய எண்ணச் சீர்மையை இனங் காட்டும் மற்றொரு கவிதை **போர்** என்பதாகும்.

கருக்கொண்ட மேகங்கள்
ஒன்றோடொன்று
        ககனத்துப் பெருவெளியில்
        மோதி, மண்ணில்
பெருமழையைத் தரவில்லை
யுத்த மேகப்
    பீரங்கிப் புகை கக்கி,
    எகிப்து நாட்டுத்
தெருக்களிலே, சிரியாவில்
விரர் சிறித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெறிக்கின்ற வியட்நாமில்
மக்கள் கூட்டம்
உருக்குலைந்து பிணமாகும்
காட்சி கண்டும்
உறங்காத போர் வெறியர்
ஒழிவதெந்நாள்?

என்று கேள்விக் குரல் கொடுக்கிறார் கவிஞர்.

ஒரு கோப்பை சோற்றுக்கு ஒரு சில பருக்கைகளைப் பதம்பார்த்தோம். முழுவதையும் சுவைப்பதும், நயப்பதும், மதிப்பதும் வாசகரின் பொறுப்புகள்.

எவ்வளவோ சிரமங்களுக்கிடையிலும், புத்தக வெளியீட்டு முயற்சி தலையெடுத்து நிமிர்வது, வரவேற்கத்தக்க ஒரு நன்னிமித்தமே ஆகும். கவிதைக் கலையை ஆதரிப்பனவாகப் பெரும் பத்திரிகைகள் செயலாற்றிய சமயத்தில், கவிஞர்களெல்லாம் தம் படைப்புக்களைப் பத்திரிகைகளிற் காணுமளவிலேயே ஓரளவு திருப்தியடைந்தார்கள். மறைந்த கவிஞர் "மஹாகவி"யின் படைப்புகளிற் பல புத்தக வடிவம் பெறுமைக்கும், பத்திரிகை நறுக்குகளாகவே இன்றைக்கும் கிடப்பதற்கும் இத்தகைய திருப்தியே காரணமாகும். இவ்வாறான ஒரு நிலைமை மாறி, புத்தக வெளியீடுகள் பரவலாக இன்று நடைபெற்று வருகின்றன. இவ்வாறான மாற்றத்தை இலக்கிய வரலாற்றாசிரியரும், ஆராய்ச்சியாளரும் மாத்திரமன்றி, பொது வாசகர்களும், புத்தகப்பிரியர்களும் வரவேற்பார்கள்.

அந்த வகையிலே 'ஈழவாணனின்' தொகுதி வாசகர்களின் மனமுவந்த வரவேற்பைப் பெறும். அல்லாமலும், 'ஈழவாணன்' கவிதைகளிலுள்ள சொல்லாட்சித் திறமும் எண்ணச் சீர்மையும் அவரது படைப்புக்குக் கிடைக்கவுள்ள வரவேற்பை மேலும் பல மடங்கு அதிகமாக்கும்.

கவிதை உலகில் அவருடைய முயற்சிகள் வெற்றிகரமான பலன்களைத் தரவேண்டுமென்று மனமார வாழ்த்துவதுடன், வாசகர்களுக்குக் கணிசமான ரசனைப்பேறு கிடைப்பது உறுதி என்ற நம்பிக்கையையும் இவ்விடத்திலே தெரிவித்துக் கொள்வது பொருத்தமாகும்.

— முருகையன்.

31/1, சிறிபால ரோட்,
மவுண்ற் லவினியா,
25. 12. 1973.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியைப் போர்த்திக் கொண்டு நிற்கும் சொற்களும் அதன் உள்ளே ஓடுகின்ற பொருளும கவிதையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. அந்த வீறு பெற்ற கவிதா நெறியில் வாழுகின்ற கவிஞன், இந்தச்சமுதாய ஜீவிகளின் புழுதி மண்ணிலேதான் அவனது கவிதையின் ஜீவனைக் காணுகின்றான் .

# நோக்கு

**பாரதி** ஏற்படுத்திய கவிதா நெறியின் ஆர்க்கஷண சக்தியால் தமிழ் இலக்கியத்தில் செய்யுள் கோர்வைக்குள் அடைபட்டிருந்த கவிதை மக்கள் சக்திய கப் பீறிட்டு எழுந்தன. அதன் கதிர் வீச்சுக்களால் நம் நாட்டு இலக்கியத்திலும் ஒரு புதிய தலைமுறை உருவாகியது.

**அவர்களின்** புதிய வார்ப்புக்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்த பெருமை நம் நாட்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கே உரியனவாகும். இவையே நமது அண்மைக்கால இலக்கிய வரலாற்றின் மறைப்புக்கள் அற்ற உண்மைகளாகும். இவ்வாறு வளர்ந்து வந்த நமது கவிதைத் துறையில் -

**இன்று** சிருஷ்டி இலக்கியத்தின் தாற்பரியத்தை உணர்ந்து செய்யப்படும் விமர்சன நோக்குகளும் நம்மவரிடையே கலந்த கலையாகப் பரிணமித்து வருகின்றன. உரையும் - பாட்டும் ஒருங்கே இணைந்து வளர்ந்து வரும்போதுதான் இலக்கியத்தின் முழுமையைக் காணலாம் என்று கூறுவர். இவ்வாறு கூறும்போது அதில் விமர்சனத்தின் பங்கும் அடங்கியே இருக்கின்றன. இது ஒரு நல்ல சகுனமாகும்.

**நவீன** இலக்கியத்தில் நமது கவிதைக்கு என்று ஒரு உன்னதமான ஸ்தானம் உரித்துடையது. ஆனல், அவை வெறும் ரூபலாவண்ணியத்தாலோ, அன்றி ஓசை நிரப்பிகளாலோ உருவாக்கப் படுபவை அல்ல. சமுதாயத்தை நிலைக்களனாகக் கொண்டு அதில் வேர்விட்டு எழும் விருட்சமாக உந்தி எழும் போதுதான் இக்காலக் கவிதையின் நவீனத்துவம் மூச்சு விட முடியும் என்ற நோக்குடையவன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையிலேயே எனது "அக்கினிப் பூக்களை" மலர விட்டிருக்கின்றேன். இதிலுள்ள ஒரு சில கவிதைகள் அவ்வப்போது சில பத்திரிகைகளில் வெளிவந்தவைகள். ஆயினும் அவை இந்நூலில் புதிய வடிவம் பெறுகின்றன. மற்றக் கவிதைகள் அனைத்தும் எனது புதிய வார்ப்படங்கள். இவைகளைப் பற்றிய தாரதம்மியத்தைச் சுவைஞர்களாகிய உங்களிடமே விட்டு விடுகின்றேன்.

எனது கவிதைத்தொகுப்பு ஒன்று வெளிவருவதற்கு ஆர்வமூட்டி, ஆக்கபூர்வமான செயல் முறைக்கு ஒத்துழைப்புத் தந்தவர்கள் பலர். குறிப்பாக கவிஞர் சு. கைலாசபதி, ஜனாப். எச். எம். பி. முஹைதீன், திரு. வி. நமசிவாயம், திரு. எஸ். சண்முகராஜா, திரு. அந்தனி ஜீவா, ஆகியவர்களுக்கும் எனது மைத்துனர் திரு. அரு - ஜெயராஜாவுக்கும், கலசம் பப்ளிகேஸன்ஸைச் சேர்ந்த எழுத்துலக நண்பர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

கல்கிஸ்ஸ.
23.-12.-73.

அன்பு -
ஈழவாணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையில் இளரத்தம்
சிறட்டும்!

## ○ பூக்கட்டும்!

கூன்விழுந்த எண்ணத்தில்
குறைமாதப் பிரசவமாய்,
குறுகுறுத்த மனஅரிப்பில்
கொட்டிவிட்ட குப்பையென
வான்கிழித்துப் பந்தலிடும்
வாய்ஜம்பப் பேச்சுகளால்
வருங்காலத் தலைமுறைக்கும்,
வாழுகின்ற சந்ததிக்கும்
வாழ்வேயில்லை!

தெளிவற்ற நரைப்பீடம்,
திசையறியாக் குருட்டுவிழி,
தீயரும்பிச் சுடர்காட்டா
திருவிளக்கு அற்றஇருள்
வழிபோன்ற கருத்துகளால்
வளர்கின்ற சந்ததிக்கு
வசந்தத்தின் ருதுயிங்கே
வாய்த்திடவும் வழியில்லை
வாழ்வுமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுகாட்டு மௌனத்துச்
சோகத்தின் சிந்தனைகள்
சுவர்க்கத்தின் நிழல்போன்ற
சோபிதத்தை விட்டிறங்கி
அடுத்துவரும் சந்ததியின்
ஆக்கத்துச் சிந்தனைக்கு
ஆர்ப்பரிக்கும் இளங்கூட்டம்
அடிகோலும் நாளின்றே
அரும்பவேண்டும்!

கற்பனையில் இழைபின்னி
காற்றிலதைக் கட்டிவைத்து
ககனத்துக் கப்பாலும்
கவ்வுகின்ற இலக்கியத்தை
அற்புதமென் றேத்துகின்ற
அழிவுநிலை ஒழியட்டும்!
அடிவயிற்றில் தீமூளும்
அவர்க்கான இலக்கியங்கள்
அரும்பவேண்டும்!

சிந்தனையில் இரத்தம்
சிறட்டும்! செல்லரித்த
சித்துவிளை யாடல்களோ
செத்தொழிந்து போகட்டும்!
விந்தையுறு நவயுகத்தின்
விளைச்சலெனச் சிந்தனையில்
விதவிதமாய்ப் புது மலர்கள்
பூக்கட்டும்! சிந்தனையில்
புரட்சிவேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுணர்வே என்பாட்டில்
ஓடிவரும் நாதங்கள்!

# ○ ஆத்மராகம்!

இருட்கோதின் மையகற்ற
ஏற்றிவைத்த சுடரடியில்
இதயத்தின் பெருமூச்சால்
எரிந்தெரிந்து, வறுமையது
வெருட்டிவரப் பிணி,மூப்பில்
வெந்துவெந்து போவாயோ...

அங்கெல்லாம் நானிருந்துன்
ஆத்மாவைக் கவியிசைப்பேன்!

எங்கோவோர் சிற்றூரில்,
ஏகாந்தப் பெருவெளியில்
எங்கேநீ இருந்தாலும்
என்னிதயப் பொற்கனவில்...

கன்னி நிழல் பாய்விரிக்கும்,
கடலோசை நடந்துவரும்
புன்னைமரத் தடியிருந்துன்
புதுயுகத்தைப் பாட்டிசைப்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கூசும் பொன்வெயிலில்
காக்கைப்பொன் தூசியைப்போல்,
கடலோர நுரைப்பூவாய்
காலமெலாம் நினைவழிந்தே
மண்மெழுகும் கண்ணீரை
மணிக்கரத்தால் துடைத்தெடுத்துன்
மனதுறைந்த ஆசையெலாம்
மலர்ந்திடவே பாட்டிசைப்பேன்!

எரிவெயிலில் உடல்பூத்துன்
இரத்தங்கள் வியர்த்துதிர,
ஏழ்மையெனும் கொடுமையினுன்
இதயமெங்கே எரிகிறதோ...

அங்கெல்லாம் நானிருந்துன்
ஆத்மாவைக் கவியிசைப்பேன்!

உன்கவட்டில் தலைசாய்த்துன்
உழைப்பினுக்குப் பூச்சொரிவேன்!
உன்னுதட்டின் எனபாடல்
ஓரினத்தின் பாட்டாகும்!

உன்னுணர்வே என்பாட்டில்
ஓடிவரும் நாதங்கள்!
என்னுயிரில் பூத்தஇசை
உன்இனத்தின் போர்ப்பாடல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தின் வேதனைகள்
எரிந்துவரும் தீச்சுடர்கள்!

## ○ கவிதை!

பொன்மனத்தின் வாசலிலே
போட்டுவைத்த எழிற்கோலம்!
புழுதியிலே வாழ்பவரின்
பொங்குகின்ற பெருமூச்சு!
எண்ணமதின் மின்னொளிப்பு,
எழுச்சிகளின் வார்ப்படங்கள்
இதயத்தின் வேதனைகள்
எரிந்துவரும் தீச்சுடர்கள்!

வான்முகட்டில் ஒளிஉமிழும்
வைரமணித் தாரகையாய்,
வார்த்தையுணர் வோடுவரும்
வரிகளிடைப் பெருங்கனவை
ஊன்குழைத்த ஓசையிலே
உதிர்த்தமணிப் பூச்சரங்கள்
உரையாடும் உயர்கவிதை
உள்ளத்தின் ஒலியங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்தையாய் வாழ்வைக் காணும்
சுந்தரக் கவிகாள்!

# O சுந்தரக் கவிகாள்!

முத்தோடு,பவளம்,வைரம்
மூரலின் தேனெம் பாக்கள்
இத்தரை மீதெங் கணுமே
இணையிலாச் செல்வ மென்றே
செத்தவன் விட்டுச் சென்ற
சீதனத் துள்ளே, இங்கே
சொத்தையாய் வாழ்வைக் காணும்
சுந்தரக் கவிகாள் கேளீர்!

சந்தியில் நாற்றம் வீசும்
சகதியில் வாழும் மக்கள்
மந்தைகள் அல்ல! உம்போல்
மனிதரே என்றெண்ணியும்
சுந்தரக் கவிகள் அவர்பாற்
றுயரினைப் பாடா விட்டால்
வெந்தணல் சிதையோ டுங்கள்
விசர்க்கவி எழுத்தும் போகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமும், பசியும், வறுமைப்
பட்டினிப் பிணியும் மூசி
மிஞ்சியே வாழ்வைத் தீய்க்க
மீட்சியே கொள்ளா மக்கள்
துஞ்சியே மடிதல் கண்டும்
துடித்திட வில்லை யாகின்
நஞ்சினும் கொடியர்! நும்பா
நாறிய பிணத்தோ டோடும்!

கற்றநும் கல்விச் செல்வம்
கவிபடைத் திடுநல் ஆற்றல்
பெற்றவ ரென்றால் சும்மா
பீத்துதல் விட்டும் மோடிங்
குற்றவர், உறவோர், நீங்கள்
உலவிடும் சமூகம் தன்னின்
குற்றுயிர் போக்கி ஏழைக்
குடியினர் உய்யப் பாடும்!

சிந்தையும், வாக்கும், உங்கள்
செயற்றிறன் அனைத்து மிங்கே
வெந்தணல் மீது போன்றே
வேகிடும் மக்கட் காக
வந்தநற் கவிஞ னென்றும்
வரலாறு அமையும் போக்கில்
சொந்தமும், சுகமும், வாழ்வும்
சுகிர்த்தெழப் பாடீர் இன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லோன் ஏழை வாழ்வை உறிஞ்சி
வாழும் நெறியது ஏன்?

## O அக்கினிப் பூக்கள்!

இதயத் தெரியும் எழுமைச் சிடையே
இளமைகள் சாவதைப்பார்!
இல்லை இவருக்கொரு வாழ்வது என்றால்,
இறைவன் இருப்பது மேன்?
விதவிதமான மரகத மணிபோல்
வீதியில் அழிவதெனில்
வீசிய அக்கினிப் பூக்களால் இறைவன்
வெந்தே அழிந்திடுக!

இல்லான் என்றும் இருப்போனென்றும்
இங்கேனவன் படைத்தான்?
வல்லோன் ஏழை வாழ்வை உறிஞ்சி
வாழும் நெறியதுஏன்?
பொல்லா வறுமைப் பிணியில் நாங்கள்
புழுவாய் அழிந்திடவோ?
கல்லாய், மண்ணாய், மரமாய் இருப்போர்
கண்ணைத் திறந்திடுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டும் வறுமைப் பிணியில் மூப்பில்
வாடிச் சாகின்றோர்
கூட்டம் இங்கே குப்பை மேட்டில்
கூனிக் குறுகிடவோ?
பாட்டும், கூத்தும், பருவப் பெண்ணும்.
பணமும் சுகமென்றே,
நாட்டில் பலபேர் வாழ்ந்திட நாங்கள்
நலிந்தே செத்திடவோ?

சூளை நெருப்பில் அக்கினிப் பூவாய்
சுடரும் ஒளிமக்காள்!
வேளை யிதுவே புதிய யுகத்தின்
விதையை விதைத்திடுவீர்!
நாளை உதிக்கும் உதயக் கதிரில்
நாங்கள் ஓர்இனமாய்,
காலைக் கதிரின் உதையின் போது
கடலாய் ஆர்த்தெழுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிச் செடிப்பூவின்
அசுரப் பசிவாடை!

## ○ வேதனை!

இரைச்சல் செவிப்பறையில்
எகிறித் துடிதுடிக்க,
எங்கோ ஒளிக்கொடியில்
இரண்டு அணுமோதும்
—ஓசை!
அதற்குள்ளே!

உதிரக் குழம்புநிறம்
உறைந்த மலர்க்கதவைக்
குடையும் சிறுதும்பிக்
குரலின் இசைமீட்டைக்
கசக்கிப் பிழிவதுபோல்
கதறல்!—அது சிசுவின்

உதறல் பிரவாகம்
உணர்ச்சிச் செடிப்பூவின்
அசுரப் பசிவாடை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைச் சுருள்போல உழைத்துக் களைத்திங்கு
உருண்டு கிடந்தது போதும்!

## O போதும்!

ஆளைப் பொசுக்கின்ற
வெய்யில் நெருப்புக்குள்
ஆயிரமாயிரம் ஆண்டாய்
ஓலைச் சுருள்போல
உழைத்துக் களைத்திங்கு
உருண்டு கிடந்தது போதும்!

நாளை நமக்கொரு
காலம் வருமென்று
நம்பிக்கிடந்த நம்வாழ்வு
பாலை வனமாகிப்
பஞ்சைப் பராரியாய்
பாதையில் கிடப்பதென் நீதி?

கூதல், குளிர், மழை
குடிசை ஒழுக்குக்குள்
குன்றிக் கிடந்தது போதும்!
சாதனை! யென்றிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றிட நாங்களோர்
சரித்திரம் படைத்திட வேண்டு!

நெற்றி வியர்வைகள்
நெருப்புத் துளிகளாய்
நிலத்தில் சிதறிட நாங்கள்
எத்தனை காலமிங்(கு)
இப்படி வாழ்வது
என்றெண்ணிப் பார்த்திட வேண்டும்!

கற்றைக் குழல்கோதி,
காதல்மது வோடிங்
கட்டிப் புரளவோர் வர்க்கம்!
பெற்ற அரும்பிள்ளைப்
பிஞ்சுக் கழுதற்று
பிணவாழ்வு வாழவோர் வர்க்கம்!

என்றஇந் நிலைதன்னை
ஈன்றஎம் தாயக
மண்ணில்நாம் மாற்றிட வேண்டும்!

போதும் இனித்துயர்
போதுமென் றேயின்றே
பொங்கி எழுந்திடு! நாங்கள்
எதும் இதற்கொரு
நீதி கிடைத்திட
இன்றே அணிசேர வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழிமகள் இந்தயுக
உருக்கொண்டு ஆடுகிருள்!

## O இந்தயுகம்!

இருளதனின் ஆத்மாவாய்
எழுச்சியிரு ராகங்கள்
ஒருகோடிப் பூமலரும்
உதயத்தே கமழ்கிறது!
இந்தயுக எழுச்சிகளின்
இதயத்தே பூத்தஇசை
அந்தரத்துப் பாவிசையாய்
ஆவியெலாம் சூழ்கிறது!

நெற்றியெனும் கடற்கரையில
நிலவூறும் அழகியர்தம்
கற்றைமலர்க் குழல்கோதி
கனியிதழின் கிண்ணிமது
ஒற்றியவர் உடல்போற்றி
ஊமையிருட்குள் அழகு
அற்புதத்துப் பாவிசைக்கும்
அடிமைகளே! விழிதிறமின்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழிமகள் இந்தயுக
உருக்கொண்டு ஆடுகிருள்
காலிலணி சிலம்போசை
கணன்றெழுந்து ஆர்ப்பரிக்க,
நானைமலர் புதுயுகத்து
நர்த்தகியாள் ஆடுகிருள்
காலைமலர் ஒளிக்கீற்றில்
கண்டிடுவீர் புதுயுகத்தை!

கண்ணீரில் விழிமிதக்கும்
காவியமாய் வாழ்வெல்லாம்
எண்ணத்திற் கிரையாவோர்
இதயத்தின் பேரழுகை!

இந்தயுக வைகறையில்
இங்கெல்லாம் கமழ்கிறது!

அடிவயிற்றுப் பசிப்பிணியால்
அக்கினிப்பூங் கொடியாகித்
துடிதுடிக்கும் ஜீவனிலே
தோன்றிவந்த பேரோசை!
இந்தயுக வைகறையில்
இருள்கோதி எழும்சுடரில்
வந்துவந்து இசைமீட்டும்
வாழ்வோசை கேட்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரபலியர் வெறியடங்கும்
நாளெந்நாளோ?

## ○ போர்

ஆதிக்க வெறிபடைத்தோர்
உலகத்தோரை
அழிக்கின்ற வெறிபடைத்தோர்
நெருப்புச்சிறி
மோதியழிக் கின்றவெடி
குண்டைவீசி
மூட்டுகிறார் செந்தீயை!
மக்களெலாம்

நாதியற்று ஓலமிடும்
போதுமங்கே
நாயைப்போல் அன்னவரைச்
சுட்டுவீழ்த்தி
சாதித்தோம் சாதனையென்
றார்ப்பரிக்கும்
சண்டாளர் ரத்தவெறி
ஒழிவதெந்நாள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்கொண்ட மேகங்கள்
ஒன்றோடொன்று
ககனத்துப் பெருவெளியில்
மோதிமண்ணில்
பெருமழையைத் தரவில்லை
யுத்தமேகப்
பீரங்கி புகைகக்கி
எகிப்துநாட்டுத்
தெருக்களிலே, சிரியாவில்
வீரம்சீறித்
தெறிக்கின்ற வியட்நாமில்
மக்கள்கூட்டம்
உருக்குலைந்து பிணமாகும்
காட்சிகண்டும்
உறங்காத போர்வெறியர்
ஒழிவதெந்நாள்?

ஒன்றுமறி யாதபெரும்
ஏழைமக்கள்
உழைப்பொன்றே பெருநிதியம்
என்றேஎண்ணிக்
கன்றிப்போய் உள்ளமெலாம்
கண்ணீரோடு
காலத்தைக் கழிப்போரைக்
குண்டுவீசிக்
கொன்றுகுவிக் கின்றகொலை
காரர்ரத்தக்
கோரபசி ஒழிவதெந்நாள்?
அலையினோரம்
நண்டுகள்போல் ஊர்ந்திடுவோர்
தம்மைக்கொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரபலியர் வெறியடங்கு
நாளெந்நாளோ?

சிற்றில்கட்டி விளையாடும்
சிறுமிதன்னைச்
சேர்த்தணைத்து முத்தமிடத்
தந்தையில்லை!
பெற்றவளும் இல்லையந்தப்
பிஞ்சுதன்னைப்
பிடித்தணைத்துப் பாலூட்ட
அழுதழுது
வற்றிவிட்ட தக்குரலும்
கணவனற்று
வாழ்விழந்த கன்னியர்க்கு
மண்ணைப்போட்டு
பற்றியெரி இன்றநெருப்
பிட்டோர்வாழ்வு
பாழாகப் போகின்ற
நாளெந்நாளோ?

யுத்தவெறி, ரத்தவெறி
கொண்டுடீக்கள்
உதிரத்தை உயிர்தன்னைக்
குடித்துறிஞ்சி
செத்தவரின் பிணத்தினையும்
கொத்திக்கொத்தித்
தின்னுகின்ற கழுகுகளை
இந்தமண்ணில்
பெற்றவளும் பெண்தானோ
பேயோஅன்றிப்
பிணக்காட்டில் வாழ்கின்ற
பிசாசோ? நாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றின்று துடிப்போர்கள்
வாழ்வுலகில்
நனிசிறந்து மலர்கின்ற
நாளெந்நாளோ?

கலைபயிலும் கூட்டங்கள்,
கல்விச்சாலை,
கடுமுழைப்பால் பயிர்வளர்த்த
வயலினோரம்,
தலைநிமிர்ந்து உழைப்பாற்றல்
தன்னைக்கொண்ட
தாயகத்து மண்ணெல்லாம்
இன்றுசெந்தீ
உலைக்களமாய் மாறிவிட
அதனைக்கண்டு
ஓவென்று கதறியழும்
மக்கள்மீது
கொலைகார சாம்ராஜ்ய
வெறியர்கூட்டம்
கொள்ளிவைக்கும் வெறியொழியும்
நாளெந்நாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமித்தாயின் மடியினில் ஆதவன்
பொற்கரம் நீட்டுகிருன்!

# ○ செவ்வானம்!

புல்லின் நுனியில் புகுந்து வருடியே
பூவில் நுகர்ந் தெழுந்து
பூமித் தாயின் மடியினில் ஆதவன்
பொற்கரம் நீட்டு கின்ருன்!

மோட்ச ராச்சியம மூண்டு உலகிடை
மோகனம் காட்டுதல் போல்,
மோனம் கலைந்து முகிலை கிழித்தொளி
முகத்தைக் காட்டு கின்ருன்!

காலை இருட்டினைக் கலைக்கையில் ஆதவன்
கைகளில் முட்புதர் கள்
குத்திக் குதறிய குருதிக் குருணியோ
கோலச்செவ் வான் பரப்பு!

– ரி. டிவாணன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கப் பரல்களை
எடுக்கவந்தேன்—

# ○ தேடல்!

பாட நினைத்து நானே
குரலெடுத்தேன்—அந்தப்
பாட்டின் ஒலியிலே
நாதமில்லை!
தேட நினைத்ததை
மறந்துவிட்டேன்—ஏதோ
தேடுகின்றேன் இன்னும்
தேடுகின்றேன்!

பெயரினைப் பெற்றதைத்
தேடுவாராம்—நானோ
பெயரில்லா ஒன்றினைத்
தேடுகிறேன்!
அயலிலும், ஊரிலும்
யாங்கணுமே—அந்த
அழிவில்லா பெருநிலை!
கிட்டவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கப் பரல்களை
எடுக்கவந்தேன்—கையில்
மண்புதை சிப்பிகள்
தானெடுத்தேன்!
தேனின மலர்களைக்
கொய்ய வந்தேன்—நான்
தேடிய மலர்களோ
பூக்கவில்லை!

அன்பின் இனியசொல்
கேட்கவந்தேன்—பல
அக்கினி பேச்சினால்
தீய்ந்துவிட்டேன்!
இன்னும் இன்னுமிங்கே
தேடுகிறேன்—நான்
தேடிடும் ஒன்றுமே
கிட்டவில்லை!

வீணையைப் பற்றினேன்
பாட்டிசைக்க—அந்த
வீணை நரம்பினில்
நாதமில்லை!
ஊனை உருக்கியே
உயிர்கலக்கும்—ஒரு
உறவினைப் பிணைக்கவோ
ஜீவனில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிழும் மானிடத்தை
மாண்ட பின்னும் வாழவைத்தே—
இறைவனுனேம்!

## O காசுக்கா?

சொல்லெடுத்துப், பொருளெடுத்து,
சுவையெடுத்து நறுங்கவிதைச்
—சுருதிமீட்டல்
கல்லெடுத்து நாருரிக்கும்
கைத்திறனென் றெண்ணியேதான்
—கவிதைவாங்க,

மெல்லவந்தென் வீட்டிற்குள்
மெதுவாகப் புகுந்தீரோ
—வெட்க மின்றி;

சுக்குவிற்க, மிளகுவிற்க,
சுண்டைக்காய் விற்பதற்கும்
—கடைபரப்பி
தக்கவிலை கூறும்வியா
பாரியென நினைத்தோநீர்
—தாவிவந்தீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குபுகழ் கொண்டபுல
வோர்களது பேரினத்தோன்
—கவிஞனையா!

செத்தவரின் புகழ்பாட
செய்யுமொரு கேடயமாய்ச்
—சேவித்தேதான்
வைத்தடக்கிச் சொல்தேய
வாய்ப்பாட்டு இலக்கணத்துள்
—வாலாற்றுேதும்

எத்தனைபேர் இங்குள்ளார்
எவரேனும் கிடைத்திலரோ
—இங்கேன்வந்தீர்?

மாரிவளர் கொழிப்பதுவும்,
மண்ணகத்தோர் வாழ்வதுவும்
—அறிந்தே நாங்கள்
ஊறியெழும் உணர்வுகளில்
ஊழிக்கூத் தாடுகின்ற
—கவிஞரையா!

நேரிசையில், தாழிசையில்
நாமயர்ந்து உறங்குகையில்
—நாமோதென்றல்!

சாதியெனும் பேய்களினைச்
சங்காரம் செய்கையிலெம்
—கவிதைசிறும்!
வீதியிலே வாழ்பவரின்
வேதனையை எழுதுகையில்
—வேகும்சொற்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிழும் மானிடத்தை
மாண்டபின்னும் வாழவைத்தே
—இறைவனானோம்!

உலகிடைநாம் பிறந்திலமேல்
உணர்வற்ற உலகிற்கே
—சுவையுமிலை!
இலங்குபுகழ் கவிமலர்கள்
என்காணும் காசுக்கா
—வாங்கவந்தீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருந்தேன் உன்வரவை
நீவரவே இல்லை!

## ○ நினைவில்லையா?

கீதமிசைத் தேக்குயில்
கீழிறங்க வாடை
கிள்ளிமனப் போதைதர
கீற்றுநிலா வானில்
பாதமிடா பயணமதின்
பாற்கதிரில் நேற்றுப்
பார்த்திருந்தேன் உன்வரவை
நீ, வரவே இல்லை!

சீதளச்செந் தாமரையின்
தேனிதழின் ஓரம்
தேங்குபனிப் பரல்உருவாய்
தீட்டுவிழிக் கூட்டின்
பூதலக்கண் மூடுமிருள்
இமைச்சிறகில் ஆசை
பூத்தழகைப் பார்த்திருந்தேன்
நீ, வரவே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சலேயில் மின்னிஎழும்
நினைவலேயில் நீந்தி
நெக்குருகச் சொன்னமொழி
நினைவில்லையா நெஞ்சில்?
கஞ்சமலர்ப் பாதமிடும்
சுவடளந்து வரவே
கருத்தில்லேயோ என்நினைவில்
கனலெழுந்து போச்சோ?

ஒளிக்திரை அவித்தஇருள்
உள்நுழைந்த வீடாய்
உள்ளமதும் ஆகிடஉன்
உணர்வெழுந்த போக்கில்
விழிச்சுடரை மூடியிருந்த
விண், சுவனம் எங்கும்
வியாபித்த இடமனைத்தும்
தேடியலே கின்றேன்!

காலமெனும் பெருவெளியில்
காற்றலேந்த போக்கில்
காத்திருப்பேன் உன்நினைவுக்
கவியளந்து நெஞ்சில்
கோலஇசைச் சிறுகுயிலே
உன்குரலேக் கேட்க
கூன்விழுந்த மூப்பினிலும்
நானிருப்பேன் காத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டுக் கதவிழுத்துப்
போ!

## ○ கல்லாகிப் போ!

நெஞ்சைக் கிழித்து
நெருப்பிட்டே, வேறுபுதுப்
பஞ்சணையைத் தேர்ந்துவிட்ட
பாதகியே!—அஞ்சியஞ்சி
வீட்டுக் கதவில்
விழிநீர்என கொட்டிநின்றாய்
பூட்டு கதவிழுத்துப் போ!

கொல்லாதே இன்னும்;
குடையாதே நெஞ்சகத்தை
நில்லாதே என்னெதிரில்
நீசமைமக—கல்லாக!
வாட்டாதே வேற்றவனின்
வாசலிலே நின்றுமயற்
போட்டுக் கொளுத்தாதே, போ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லும் பகலும்
அணைத்துக் கிடந்துனையென்
சொல்லில் வடித்ததுவும்
சொப்பனமோ?—உள்ளமதில்
நட்ட பெருங்காதல்
நாற்றை பிடுங்கிவிட?
ஒட்டைப் பிரித்தவளே, ஓடு!

வட்ட விழிவீசி
வந்தென் சடைக்கயிற்றால்
கட்டி இழுத்தழித்த
காரிகையே—இட்டஇருந்தே
அன்று மொழிந்ததெல்லாம்
ஆபாசம் ஆக்கிவிட்டாய்;
ஒன்றைப் பிளந்தவளே, ஓடு!

இன்னும் சிலநாளில்
இட்டசிதை காட்டினிலே
என்னோடு மூடி
எரியுங்கால்—உன்நினைவு
வேகாதோ? வெந்துபிடி
வெண்சாம்பல் நீறாகிப்
போகாதோ? அப்பாலே போ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O பாரதி!

ஆண்டு பற்பல ஆடியும், பாடியும்
ஆன மெய்யுடல் பசிப்பிணி உற்றுமே
ஈண்டு நற்கவிப் பேறுகள் யாம்பெற
எட்டை யாபுர இன்கவி பாரதி
தோன்றி ஞானத் தோத்திரம் பாடிட
தூய சொற்றொடர் தூக்கிப்பல் லாண்டதாய்
பூண்ட விரதமென்? போற்றும் மனதிடைப்
போது, அவிழ்ந்தநற் புதுமைகள் எத்தனை?

வாதை புரியிளம் மாவடு கண்ணினர்
வந்து போயுமவ் வாவி தொடர்கின்ற
பாதை முற்றுமே பதித்த சுவடதன்
பான்மை யிற்பல பாடல் பிறந்தன;
கோதை யர்அழ கோர்த்த நறுங்கவி
கோடி கோடியே யாத்தும் மனதிடைப்
போதை தெளிந்ததோ? போன இரவதும்
புன்மை அழிந்திடாப் போனதே பாடலும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமுற் றழந் தோடி யாங்கதன்
வண்ண வண்ணநல் மீனைப் பாடியும்,
கூனலாம் பிறைக் கீற்று நிலவது,
கொட்டும் பாலொளி அமுதம் என்றதும்,
ஊனலாம் உருக் கின்ற சுரமென
ஓசை பெற்றதை உருக்கி வார்த்ததும்,
கானலாம் தமிழ்க் கவிதை எங்கணும்
கார ணம்இதன் புதுமை சொல்லுவீர்?

பார தீயவன் பாட்டுச் சாதனை
பாரீர் என்றுநாம் பாடும் போதிலும்
சார தீதமிழ் சான்ற புலவனின்
சங்க திசில வைத்து எங்களை
ஊரெ லாம்புகழ் கின்ற பான்மையில்
உரைத்தல் விட்டுநாம் என்ன செய்தமோ?
யார வன் அவன் பாதை ஒற்றி ஓர்
புதிய சாதனை புரிந்த புலவனோ?

காட்டுக் குயிலொன்று கானம் இசைத்ததைக்,
காதில் கேட்டவன் காதை தந்தை,
நாட்டைப் பலதுயர் ஆட்டிப் படைத்ததை,
நாதம் எழுப்பியே நாயின் றறிந்திட
எட்டில் பலகவி சொன்ன பாரதி
எல்லாம் உணர்ந்தவன் போலச் சொன்ன அக்
கூற்றின் வழியினை ஒற்றி இங்குநாம்
கோடி கோடியாய்ப் பாடல் பாடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்ட ஆசைகள்
முற்றும் தீயுதே!

# ○ யார் உழைப்பவன்?

தேசு பெற்றுள தீட்டு நற்கவி
தேக முற்றுணர் வோடு ஈங்குள
வீசு காற்றிடை விம்மு வாடையை,
வீணை யின்ஒலி கூட்டு தோப்பினை,
பாசி போல்யிதந் துள்ள தேயிலைப்
பந்த லின் அழ கோர்க்கும் ஆசையால்
நாசி உள்ளிடும் நறு மலர்களின்
நாட்ட மாலிவன் கவிதை பாடினேன்!

பல்ல வமணித் திவு பக்கலில்
பார் விழி,ஒளி பற்றி நின்றிடும்
தெள்ளி யபால் ஆன திவிது
தேசு பெற்றிடத் தேய்ந்த மக்களின்
உள்ள மோடுற வாடி, அக்காம்
உழுத மாமலை உயர்வு பார்க்கையில்
வல்ல சிற்பிகள் வாழ்வெ லாயிருள்
வாட்ட வேதனை யோடு சாகிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை களின்வெறி யாட்டம் ஒன்றல
தூது போகுகங் காணி மார்சிலர்
கறை படியவே கன்னி யர்களின்
கற்பை விற்றிடும் இழிவு சொல்வதா?
குறை களைந்துமை கோபு ரத்திலே
குடி யிருத்துவோம் என்று கூறுவோர்
வரையில் அன்னவர் வாழ்வு பாழடா
வறுமை யோடவர் உழன்று சாகிறார்!

கன்னி போலிளங் காற்றில் ஆடியே
காட்சி சொல்லுமத் தேயிலைச் செடிக்
கென்று எத்தனை ஏழை மக்களின்
எலும்புக் கூடுகள் உரமாய் ஆகின?
முன்னை சென்றவன் சிதையைக் கொண்டமண்
மூடி யுள்ளஅக் குழியின் மீதிலே
இன்று ழைத்திடும் இளைய கூட்டமோ
இன்றோ, நாளையோ? இரையாய் போவதா?

காய்ச்சி டும்நெருப் பாற்றில் நெய்யென
கங்குல் மூடியத் தோட்ட மக்களின்
மூச்சி லேயிளங் கன்னி யர்களின்
மூண்ட ஆசைகள் முற்றும் தீயுதே!
தீச்சு வீசுதம் இளமை மண்ணிலே
தேயிலை யுடன், கொக்கோ, ரப்பராய்
ஆச்சு தேயடா அந்தோ! அன்னவர்க்(கு)
யார்! உழைப்பவன், யார் உழைப்பவன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்ணாய்ந் தோன்**
**தனைமறந்த தமிழச்சாதி!**

# O விபுலாநந்தன்!

தொண்டியெனும் பேரூரின்
யாழும், கொற்கைத்
துறைமுகத்து நல்லிசையும்,
வளவர் நாட்டு
மண்டலத்து இசையரங்கின்
ஒலியும், காதல்
வளர்மங்கை மாதவியின்
கூத்தும், சீர்த்தி

கொண்டிலங்கும் தமிழிசையின்
நாதப் பிரம்மம்
குழைத்தின்ப மூட்டியதென்
றூர்கள்! அந்தப்
பண்டிலங்கும் இசையாய்ந்து
'யாழ் நூல்' தந்த
பண்ணாய்ந் தோன்
தனைமறந்த தமிழச்சாதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளுண்டோர் நடைபோலக்
கணிகை மாதர்
கண்வீச்சு மயக்கம்போல்,
கடல் அலைகள்
தள்ளுண்ட நுரைபோல,
தமிழின் கலைகள்
தரங்கெட்டு மேல்நாட்டு
மோகத் துள்ளே

அள்ளுண்டு போகாமல்
விபுலா நந்த
ஆண்ட்ரேனின் தனிச்சிறப்புப்
பெற்று மின்று
தொல்லிசையின் விழாக்களிலும்
தூயோன் நாமம்
தோற்றுது விட்டதடா
தமிழச் சாதி!

காவிரிப்பூம் பட்டணத்து
யாழின் தந்திக்
கரந்தடவிப் பாடியதும்,
கவிஞர் செல்லாம்
பாவிரித்துப் பரவியதும்,
இசையின் பாங்கை
பண்விரித்துப் பாடியதும்,
பண்டை நாளில்... ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவிவரும் காதலனோ
சாய்ந்து கொஞ்சத்
    தன்கூந்தல் விரிப்பதற்கு
    மறக்காள் மங்கை!
பூவிரிக்கும் மரம்கூட
விபுலா நந்தன்
    புகழ்விரிக்க மறந்ததடா
    தமிழச் சாதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்வேகப் புத்துலகம்
புறப்பட்டார்கள்!

# ○ புத்துலகம்!

கண்பொத்தி விளையாட்டுக்
காட்டி யிங்கே
 கனவுலகில் வாழ்கின்ற
 நிலையில் உள்ளோர்
பன்னீரில், சந்தனத்தில்
குளித்து வாசப்
 பனிமலரின் சுகங்கண்டு
 படுத்துக், காதற்
பெண்ணாரின் இதழோரம்
சுவைத்து வாழ்வுப்
 பேரின்ப நிலைகாணும்
 வர்க்கத் தோரின்
எண்ணங்கள் மண்ணாக
இந்த வையம்
 எழுந்தோடிச் செல்கிறதோர்
 உலகை நாடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறியெழும் நெருப்பாற்றில்
குளித்து, வாழ்வுச்
சிறுமையெனும் சகதியிலே
செத்து, மேலோர்
காறிஉமிழ்ந் திட்டஒரு
எச்சில் வாழ்வாய்க்
கவல்ந்திட்ட கூட்டத்தார்
கனன்ற் றெழுந்து
மாறிவரும் ஓர்உலக
சஞ்சா ரத்தின்
மக்களெனத் தாமுணர்ந்து
இன்று இந்த
ஊரினிலே, உலகினிலே
ஒன்று கூடி
உத்வேகப் புத்துலகம்
புறப்பட் டார்கள்!

முத்துமணி மாடங்கள்,
கோபுரம், ஊர்
முழுவதிலும் உள்ளவயல்,
தோட்டம் மற்றும்
எத்தனையோ தொழிற்கூடம்
எல்லாம் இங்கு
எம்முடைய சொத்தென்றே
இறுமாப் புற்று
வித்துவத்துச் செருக்கோடும்
வாழும் வர்க்க
வீணருக்குத் தூக்குமரம்
அங்கே உண்டாம்!
எத்திக்கும் இல்லாமை
இல்லா தான
எழிலுலகச் சஞ்சாரம்
தொடங்கிற் றிங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணவீக்கம் கொண்டஒரு
கூட்டம் வாழ்வைப்
பகடைக்காய ஆக்கிப்பின்
ஏழை மீது
கணவானாய்ப் பவனிவரும்
காட்சி அற்றோர்
கற்பனைப்பூங் கொம்பரற்ற
ந டு அஃதே!
உணவுக்கு, உழைப்பினுக்கு,
உறங்கு தற்கு
ஒண்டஒரு இடமற்று
அலையும் மக்கள்
தனதென்று கூறியா
சாலும் நாடு
தனைநோக்கி விரைகிறதிவ்
வுலகம் இன்று!

உழைக்கின்ற மக்களா
சாங்கம் அங்கே!
உணவுக்குப் பிறநாட்டில்
பிச்சை யேற்று,
தலைசொரிந்து அடிமைகளாய்ப்
பிறநாட் டார்கள்
தருகின்ற பிச்சையினில்
வயிர் வளர்ப்போர்
கனவிலும் காணுத
வையம் தன்னைக்
காண்பதற்கு ஓடுகின்ற
திந்த வையம்!
தனக்கென்று வாழாது
வாழும் மக்கள்
தலைநிமிர்ந்து வாழுமது
பொதுமைப் பூங்கா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசப் பௌர்ணமி
ஊர்வலம் இல்லை!

# O சமுதாய வீதி!

நாறிக் கிடக்கும்நம்
சமுதாய வீதியில்
நட்சத் திரங்களோ
புஸ்பிக்க வில்லை!

ஊரின் தெருக்கோடி
ஒழுங்கைகள் எல்லாம்
உல்லாசப் பௌர்ணமி
ஊர்வலம் இல்லை!

சீறிக் கிழித்திடும்
மின்னல்கள் எங்கோ
சிற்சில வேளையில்
எழுந்தது உண்டு!

சேரியின் வாழ்விலே
வாணத்து வியர்வை
சிலிர்த்திடும் தூறல்கள்
பெய்யவும் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றம் எடுத்திடும்
இதயத்தை மூடி
நறுமணச் சவ்வாதுக்
கவிதைகள் பாடி,

சேறும், சகதியும்
கொண்டநம் வாசல்
சின்ன ஒழுங்கையால்
செல்வோர்கள் உண்டு!

காற்றூதி எரிக்கின்ற
அக்கினி யாயெம்
கண்கள் உகுத்திடும்
கண்ணீரைக் கண்டும்,

நேற்றின்றும் துடைத்திடக்
கரங்களோ இல்லை!
நெஞ்சத்தில் ஒளிப்பூக்கள்
பூக்கவு மில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்மையெனும் வறுமைக்குள்
கிடக்குதடா பெண்மை!

## ○ பெண்மை!

பூக்காதோ முல்லைமலர்,
புலராதோ பொழுது?
பொன்தாதுப் பொடிகோதிப்
பாடாதோ வண்டு?
கேட்கத்தான் ஆளிலையோ,
கிளராதோ நெஞ்சம்,
கீழ்மையெனும் வறுமைக்குள்
கிடக்குதடா பெண்மை!

வேர்க்கடலைப் பொரியெனவே
பொருமுகிறார், குடிசைப்
பொந்துக்குள் வாழ்வறியாப்
புத்திளமைப் பெண்டீர்!
நீர்விழிகள் கசிந்துருக,
நினைவழிய நெஞ்சம்
நெடுமூச்சுக் குள்குமையும்
நிலையென்று போமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநீலச் சுரிபுரளும்
    அலைகூந்தற் பெண்டிர்
கண்மயக்கம், இதழ்வெழுப்பு,
    கைவளையல் சோர்தல்,
கருமணிகள் பூப்பதுவும்,
    கார்பசலை நோயும்
காதலினால் வேகுமிவர்
    இலக்கணங்கள் யாவும்

முத்துதிரும் முகமெல்லாம்
    மூச்சழியு மந்த
மோகனத்துப் பாட்டுருவாய்
    ஆனஇவர் வாழ்வில்
ஒத்தவைகள் அல்லவோதான்
    உயர்குடும்பப் பெண்டிர்க்
குரியவையோ காதலதும்
    ஒருகுலத்துச் சொத்தோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்பயண முடிவெழுதி
தனிவழியே ஓடுகிறோம்!

## ○ ஓ...மனிதா!

சூனியத்தை மோதியதைச்
சுட்டெரித்துப் போடவென
சுருக்கவிழ்ந்த என்னுள்ளச்
சுரப்பினிலே ஊறியதோ
மானிடஉன் வழிப்பயணம்!
மண்ணடியில் உன்வாழ்வு
மானியத்தைக் கூற அடி
மனத்திலெழும் ஆட்டங்கள்!
சூரியனின் ஒளிஉறுஞ்சித்
தொட்டிலென ஆடுமந்த
தொலையுள்ள மதிவட்டப்
பாழ்வெளியின் பகட்டொளியை
வாரியெடுத் தாடுவராம்
வனிதையர்தம் துயிலெனவே
வட்டுலகு மானிடஉன்
வாழ்வுமிது போல்மயக்கம்!

விழிமூடிப் பிறப்பெடுத்து
வீழ்ந்திட்ட இவ்வட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்பயண முடிவினிலும்
வாடிக்கை யாகவேகண்
ஒளியற்று மூடியேதான்
ஓடுகிறாய் உன்பயணச்
சுவடழுத்தும் பாதையது
சூனியமா காலவெளி?
கழியுதுபல் நொடிபலவும்
கடைவிரிப்பா மானிடத்தோர்?
காசுவிட்டு வாங்குவதார்
கடையில்முத லாளியில்லை
அழிந்துவிடும் வாங்கிவிட்டால்
உன்வாழ்வுக் கணக்கடியை
அவரிவரும் பார்த்துவிட்டார்
அடியில்லிடை பெருமயக்கம்!

முன்னறியோம் இவ்விடத்தை
முடிச்சறுந்து வீழ்ந்தவுடன்
முன்னிற்கும் பலமுகத்தை
முழுதறியோம் நாள்கழிய
அன்னையெனத் தந்தையென
அவரிவரும் உறவென
அண்டுகிறார் பாசமதாம்
அடுத்தவரின் சிந்தனைகள்

தன்னிலரா சோர்க்கிறோம்
தள்ளாடிப் போதழிய
தன்பயண முடிவெழுதி
தனிவழியே ஓடுகிறோம்
மண்ணடியில் நமதுஉடல்
மற்றெங்கோ ஆவியது
கடைசியிலே பாச,மன்பு
கண்டவர்கள் யாருமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்புக் குடங்களைப்போல்
செல்வர்களின் கண்ணுறக்கம்!

## ○ குடும்பம்!

உச்சி வகுத்ததுபோல்
ஓடுகின்ற நீரோடை,
பச்சை இளங்கதிர்கள்
பம்மிப் படர்ந்தவயல்,
கச்சில் இளமுலைகள்
கனிவதுபோல் தென்னைகளின்
உச்சிக் குலைதூங்கும்
ஊரின் ஒருபுறத்தே...

தென்னை இளங்கீற்றுச்
சிறுகுடிசை வாசலெல்லாம்
புன்னை மரம்பூத்துப்
பொலிந்திருந்த முற்றமதில்
மண்ணை அளைந்தளைந்து
மணல்வீடு கட்டுகிற
சின்ன இளஞ்சிறுமின்
செல்ல விளையாட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிருட்டில் கண்ணயர்ந்து
கதிர்கோதிக் கண்மலர்ந்து
பூரித்த வயற்புறத்தே
போயயர்ந்த தென்றலிலே
தேருாக குஞ்சரங்கள்
தென்றலிலே அசைவதுபோல்
வாரூர்ந்த மென்முலையார்
வரம்புகளில் நடைபயின்றார்!

தப்பித் தலைநிமிர்ந்தால்
தலையிடிக்கும் சிறுவாசல்
உப்புப் பொரிந்துதிரும்
உவர்மணலின் சுவருக்குள்
கப்பும்இருள் கரைக்கும்
கைவிளக்கின் பொற்சுடரில்
செப்புக் குடங்களைப்போல்
செல்வர்களின் கண்ணுறக்கம்

ஆற்றோரம் குளிர்நீரை
அள்ளிக் குளித்தவளும்,
சேற்றோர வயற்புறத்துச்
சிருக் குழைத்தவனும்
காற்றூரும் கருங்கூந்தல்
காதோரம், காதலிம்பக்
கூற்றோதிக் குலவுகின்றார்
குடிசைக்குள் ஒருகுடும்பம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்திடும் ஏழ்மைத் துயரம்
எனக்கது கவிதை யாகும்!

## O தனிமை!

பொய்யிருள் சூது வஞ்சப்
புழுதியில் உலகம் துஞ்ச
மையிருட் கோலத் துள்ளே
மணிவிளக் கொன்றை ஏற்றி
ஆர்த்தெழும் கவிதை நெஞ்சின்
அழகினைத் தீட்டும் போதில்
ஈர்த்திடும் ஏழ்மைத் துயரம்
எனக்கது கவிதை யாகும்!

மாவடு விழியாம், மையல்
மாதுடன், ஈற்றில் இங்கே
சாவொடு மாயை என்றத்
தத்துவச் சட்டைப் பேசும்
தொழும்பரின் வையம் விட்டு
துயிலுறும் போதில் நெஞ்சில்
ததும்பிடும் கவிதை அந்தத்
தத்துவம் எனக்குப் போதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தணக் குழம்பாய், ஈரச்
சாரலாய் தூறும் நிலவு
அந்தரத் தீவுக் கோடும்
அவசர, அணு விஞ்ஞான
விந்தையும், இழட்டு ஞான
விளக்கமும் அற்று; ஜீவத்
தந்தியை மீட்டுப் பாடும்
தனிமையே எனக்குப் போதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்குழைத்த கிளர்ச்சிக்கு
உனைப்போற்றி விட்டவனார்?

# O நிஷ்டை!

விண்ணாழித் திரையின்கீழ்
    விரித்திட்ட மணற்பரப்பு
விசையற்ற துயர்துடைக்க
    விரும்பிட்டோ பூங்காற்றே
பன்நாளும் சிந்தித்திப்
    பாரெல்லாம் பூரித்தே
பூக்குலத்தைப், புல்நுனியைப்
    போகத்தால் கொஞ்சிட்டாய்?

மீன்சுழித்த கடற்பரப்பு
    வெண்குருத்து மணல்மோத,
வேஅசைய, மானிடர்வாய்
    விரிந்தசைய, அணுஅசைத்தே
ஊன்குழையச் சுரமெடுத்து
    ஓங்காரம் மூழ்கவென
ஓர்நிலையைச் சிருஷ்டித்தே
    ஓசைக்கு வித்திட்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகற்றும் உளம்விரியாப்
பண்பற்ற மானிடத்து
பாதைசுவட் டோரமெல்லாம்
பாயிருட்டுக் கோரமதே!
உலகத்துச் சிறுமைதுயர்
றொன்றிட்ட சகதியிலே
ஊன்குழைத்த கிளர்ச்சிக்கு
உனைப்போற்றி விட்டவனார்?

புத்தகமும் அறிவொளியின்
புதுமைகளினால் சிறக்கும்!
போயொழியும் மனுக்குலத்தோர்
புழுதிவழிச் சுவடழிக்கும்
வித்துவத்தைக் காட்டாமல்
விஞ்சைநிலா பால்பொழியும்
வெட்டவெளி வெம்பரப்பில்
விதிக்கிரை யாகின்றனர்

கால்சுரக்க அணுப்பிளந்து
கடையூழிச் சீற்றத்தின்
கடவுள்நிகர் என்றோதிக்
கர்வத்திற் கிரையிட்டோம்
ஆள்சுரக்க நடுநடுங்கி
அவரிவரும் தடமறியா
அணுப்பரப்பின் ஓரத்தில்
அண்டவெளிக் கேகின்றார்!

நரையழித்த அறப்பீடம்
நற்றிசைக்கு ஏகாமல்
நனவோட்டக் குமிழிகளை
நாரெடுத்துக் கோர்வைவிழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிட்டுப் பேயிருட்டின்
சீற்றத்தில் உயிரணுக்கச்
சிக்கறுத்துப் பாயாமல்
சேற்றிலுழன் றழிகின்றார்!

சிமிழ்மூடிச் சிந்தனையைச்
சிலையாக்கிச் செயலற்று
செய்யுகிற பெருநிஷ்டை
செகப்பிரமைக் கோதுடைத்து
குமிழியிடும் மானிடத்துக்
கோட்டத்துள் கொலுவிருக்க
குடிபெயர்ந்து மௌனவழிக்
கொலுவகற்றிக் குடிபுகுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அசைந்தின்று
அலைபவளைக் காணலையோ?

# ○ பெருமகனே!

நிலவு முகங்காட்டி, நித்திரைக்கு ஓராட்டி,
களவு தெரியாததுன் காலுதைகள் பட்டவளைப்
பாராமல், இன்றுபுதுப் பாவையரின் கைகோர்த்து
ஊரார் உனைத்தூற்ற உலவும் பெருமகனே!

சின்ன மணல்கோதிச் சிறுவிரலால் நீஅன்று
அன்னைத் தமிழெழுத்தின் 'அ'வென்று சுழித்ததனைப்
பார்த்து மகிழ்ந்தவளைப் பாசச் சுனையினிலே
கோர்த்து அவள்தோளில் கொண்டு திரிந்தவனே,
எண்ணிப் பார்ப்பதற்கும் இன்று மனமின்றிக்
கன்னி இளமாதர்க் காதலிலே துயில்கின்றாய்!
இளமைக் கவர்ச்சியெலாம் இரையாகிக் காலனுக்கே
பழைமை நினைவிலுனைப் பார்க்கத் துடிக்கின்றாள்!

சில்லுக்கோ டாடியவுன் செல்ல விளையாட்டைக்
கல்லாய்ச் சமைந்தன்று கண்டுகளித்த அவள்
கண்ணூறு பட்டுவிடும் கண்மணியே என்றுபிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணெடுத்து உனைச்சுற்றி மனையடுப்பில் போட்டஅவள்
நாடி தளதளக்க நரைதிரையின் மூப்பினிலே
ஆடி அசைந்தின்று அலைபவளைக் காணலையோ?

சீராட்டி உன்னுடனே செல்ல மொழிபேசி
பாராட்டி உன்னையன்று பள்ளிக் கனுப்பிவிட்டுக்
கைவீசி நீசென்ற காட்சியினைக் கண்டன்று
மெய்சோர மகிழ்ந்துகரம் மெல்லசைத்துக் காட்டியவள்
கண்ணின் ஒளிசேரக் கையிலோரு கோலுடனே
மண்ணை அளைந்தளைந்து மனமுருகல் காணலையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியெலாம் மானுடத்தின்
ஆத்மா அழுகிறது!

## ○ ஆத்மா!

உலகின் இருட்கிழவி
    உலவிவரும் போதினிலெனை
உறவைப் பிணைத்தகுரல்
    ஓலங்கள் கேட்கிறது!
வழமைப் பழங்குரல்கள்
    வாசல்வந்து மோதியதன்
வறுமைப் பாட்டொலியால்
    வாழ்வெல்லாம் தீய்க்கிறது!

கண்பொசுங்கி நீர்வழியக்
    கைவிரல்கள் தலையழுத்த
கபலமெலாம் காத்திருந்தும்
    காரிருட்டாய்ப் போனதென்றே
எண்ணைப் பெருங்கோயில்
    இடிந்தழிந்த மாளிகையை
எண்ணியெண்ணி அழுகுரல்கள்
    இதயத்தை அரிக்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாய் நனைந்தெழுந்த
    மூடுபனித் தேன்கதிரில்
மூச்சுவிடத் துடிதுடித்து
    முனங்கும் மானுடத்தின்
ஒற்றையடிப் பாதைவழி
    உறங்குகின்ற வர்க்கமதின்
உள்ளத்தின் அழுகுரலென்
    உணர்வெல்லாம் எரிக்கிதே!

எதுகையிலே, மோனையிலே
    எழுத்தேரு அழுகுரல்கள்!
இசையாய்ந்து யாழ்நரம்பில்
    மீட்டாத அபசுரங்கள்!
வெதும்பிச் சூம்புகின்ற
    வேதனையில் இராமுழுதும்
வீதியெலாம் மானுடத்தின
    ஆத்மா அழுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தின் பொருளறியாத்
தனிவழியே போகின்றேன்!

# ○ பயணம்!

தத்துவத்தின் பொருளறியாத்
தனிவழியே போகின்றேன்!
முத்துநிலாப் பந்தலின்கீழ்
முன்னறியா அவ்விடத்தே
எத்தனைபேர் முன்சென்றார்
எவரேனும் விளக்காஅத்
தத்துவத்தின் பொருளறியாத்
தனிவழியே போகின்றேன்!

குளிர்கோதும் வாசநறுங்
கூந்தலினைக் கோதி, நிலாத்
தளர்மெழுகும் தண்ணமுதில்
சயனித்த வாழ்வதுவும்
விழிமின்னல் போலெங்கோ
விளங்காமல் போய்விடவே
வழியறியாப் பயணமிதில்
வாழ்வறியா தோடுகின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்நடந்தோர் அடிச்சுவடும்
முழுதறியாப் பான்மையதால்
கண்ணளந்து, கைடளந்து
காலளந்தும் பார்க்காத
மண்ணகத்தின் பாதைவிட்டென்
மணச்சுமையெல் லாம்சுமந்தே
தன்வழியே போகின்றேன்
தனிவழியே போகின்றேன்!

சுற்றமெலாம் விட்டுவிட்டுச்
சுவனத்தில் சுகித்திருந்த
நற்புகழை என்இனிய
நலமெல்லாம் தான்துறந்தே
கற்பனைக்கும் எட்டாவோர்
கற்றவரும் தான்அழியா
ஒற்றைவழிப் பயணமிதில்
ஓடுகிறேன்! ஓடுகிறேன்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பேன் உன்நினைவுக்
கவினழந்து நெஞ்சில்!

# ○ குயில்!

என்னிதயக் கூட்டினிலே
ஏற்றிவைத்தேன் ஓர்குயிலை
பண்ணழகின் வண்ணமெலாம்
பாட்டிசைத்து விந்தைமிகு
தன்குரலால் என்உணர்வுத்
தந்தியினை மீட்டியேதான்
எண்ணமெலாம் கவிமணக்க
இருந்தகுயில் இன்றெங்கோ
தன்னோசைச் சரமெல்லாம்
தந்துவிட்டுப் பறந்ததுவே!

காற்றோரம் பூமணக்கும்
கனிவாயில் தேன்மணக்கும்
நேற்றிருந்த என்குயிலின்
நினைவெல்லாம் கவின்மணக்க
பாற்குடமோ, விஞ்சைநிலாப்
பந்தலின்கீழ் கால்கடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுஇப் பெருந்துயரம்
அறிவிற்குப் பின்னும்
தேற்றுது எனக்குயிலைத்
தேடுகிறேன், தேடுகிறேன்!

பாட்டுருவே என்னிதயப்
பஞ்சரணையில் கண்ணயர்ந்து
வாட்டுமெந்தன் வாலிபத்துள்
வாழ்ந்திருந்த சிறுகுயிலே!
கூட்டுக்கே தீமூட்டிக்
கொள்ளிவைக்கும் நாள்வருமுன்
காட்டுத்தீ போல்மூண்டு
கணகணெறெழுமுன் நீமீட்ட
பாட்டெண்ணி என்னகத்தே
பறந்துவரக் கூடாதோ?

ஒளிக்கதிரை அவித்தஇருள்
உள்நுழைந்த வீடாய்
உள்ளமதும் ஆகிடஉன்
உணர்வெழுந்த போக்கில
விழிச்சுடரை மூடியிருந்த
விண்,சுவனம் எங்கும்
வியாபித்த இடமனைத்தும்
தேடியலை கின்றேன்!

காலமெனும் பெருவெளியில்
காற்றலைந்த போக்கில்
காத்திருப்பேன் உன்நினைவுக்
கவினளந்து நெஞ்சில்
கோலஇசைச் சிறுகுயிலே
உன்குரலைக் கேட்க
கூன்விழுந்த மூப்பினிலும்
நானிருப்பேன் காத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயும், நொடிப்பும்
நூறுவரும்!

# O ஒருதாயின் தாலாட்டு!

பாயும் பலகந்தல், பஞ்சணையா
இங்கிருக்கும்?
நோயும், நொடிப்பும் நூறுவரும்
நொந்தஉள்ளத்
தாயின் மடியேறித் தாவுதற்கு
நேரமெங்கே?
காயும் குளிரதனில் கண்துயில
வோ, பிறந்தாய்

கூடை முதுகேற்றிக் கொழுந்தெடுத்துக்
கொட்டுகின்றோம்.
பாடை மீதேறிப் பயணம்போம்
நாள்வரையும்,
பெற்றேன்(ன்) உன்னையடா பிரியமுட
னே, அணைத்து
உற்றேவல் செய்யுதற்கு ஓய்வேது?
உன்னையந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை மடுவத்தில் புரண்டுருளப்
போட்டுவிட்டே,
கல்லாய் மனதாக்கிக் கண்மணியே
போயவிடுவேன்.

மாதம் முழுவதுமே மலையேறிக்
களையெடுத்தும்,
ஏதும் சிலகாசு இங்கிருக்கா?
இவ்வுலகில்,

எத்தனையோ தாய்மடிகள் இங்கிருக்க
என்மடியில்
முத்தாய், பவளமதாய் முழுமதியே
ஏன்பிறந்தாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு,நகர் நாம்வாழும்
நரகத்தைப் பாராயோ?

## ○ யாத்திரீகா!

காலச் சிறகுகளின்
கருக்கல் புகையிருட்டில்
தாளக் கீர்த்தனையின்
தனிப்பயண யாத்திரீகா!

உன்பயணம் தூய்மையென்பர்,
உன்சுவட்டைப் புனிதமென்பர்,
என்புருகி உருகிடநீ
ஏகாந்தம் செல்லுகிருய்!

ஆத்மாவின் விமோசனத்து
அமைதிக்காய் கங்கை,நதி,
க்ஷேத்திரங்கள், கோயிலெனச்
செல்லுகிருய் யாத்திரீகா!

உன்பயணச் சுவடதுவும்
உன்னதத்த மானதுதான்!
கண்ணீரின் வாழ்க்கையதைக்
கடந்ததுதான்; என்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்தில், சிந்தனையில்
ஆசைகளைப் போசுக்கிடினும்
சன்னத்த மாடுவதுன்
தனிமனிதச் சுயநலமே!

வீடு,வெளி, வீதியெங்கும்
வியாபித்த மானுடரின்
நாடு,நகர் நாம்வாழும்
நாகத்தைப் பாராயோ?

புயல்சுமந்த மௌனத்தில்
போராடும் எங்களின
அயலிருந்து எம்மவரின்
ஆத்மாவைப் பாடாயோ?

இந்தயுக இளவர்க்கம்,
என்னுடைய ஆத்மாக்கள்,
வெந்தணலின் தீச்சுடர்கள்,
வீழ்ந்தெரியும் சந்ததிகள்!

கர்ப்பச் சிறையினிலே
கருச்சுமந்த ஓர்யுகத்தை
பெற்றெடுக்கத் துடிதுடிக்கும்
பெருவாழ்வில் நீயும்சேர்,

உன்னுழைப்பு எம்வர்க்க
உழைப்பாக மாறட்டும்!
கன்னிநிழல் பாய்விரிப்பில்
களித்திடுவோம்! அதன்பின்னே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடட்ரடும் உன்பயணம்
தூயநனி நெஞ்சத்தோர்
அடரிருளைப் போக்கப்போ
ஆத்மாவை வழிநடத்தும்,

உன்பயணம் தனிமனிதன்
உடன்கட்டைப் பயணமன்றி
என்வர்க்கத் தோர்தொடரும்
எதிர்காலத் தொடராகும்!

உன்பாட்டு தனிப்பாட்டாய்
ஓசையற்றுப் போகாது,
உன்சுலோகம் ஒருமனிதன்
உச்சரிப்பாய்ப் போகாது,

உன்பின்னால் ஓர்கூட்டம்
ஓடிவரும்; அக்கூட்டம்
மண்ணகத்தைப் பொன்னுக்கும்
மானுடத்தின் குரலாகும்!

72+8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் நண்பன் ஈழ வாணன்
இனியபண் பாளன்;வண்ணப்
பொன்மணிக் கவிதை பாடும்
புதுயுகப் புலவன்; கட்டிக்
கன்னல்போல், கனிபோல்,
தேன்போல்

கற்கண்டின் சுவைபோல், பால்போல்
நன்னயம் கொழிக்கும், இன்ப
நறும்பாடல் பாடும் நண்பன்!
வரட்டுவே தாந்தம் பேசி
மக்களைச் சுரண்டு கின்ற
புரட்டர்கள் கூட்டத் திற்குப்
போர்முர சாவான்; என்றும்
இருட்டிலே உலக ளக்கும்
எத்தர்கள் சிரத்தைக் கொய்து
உருட்டவே கவிவாள் ஏந்தும்
உயர்தமிழ்க் கவிஞன் வாழ்க!

கவிஞர் பாலபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org